1974 மார்ச் 21]

பாட்டை. எடுத்துவிட்டார்கள். கட்டுப்பாட்டில் வைப்பதற்கான உத்தரவை கேட்டுக் கொண்டிருக்கிருேம். எந்த ஒரு கொள்கையை வகுத்தாலும் உற்பத்தியாளரின் விலையைக் குறைக்காத அளவிலும், அதேசமயத்தில் அதை வாங்கிப் பயன்படுத்தும் மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைப்பதற்கும், விலை ஏருமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: அரிசி மொத்த வியாபாரத்தை அரசாங்கமே ஏற்று நடத்துவதற்கு மத்திய அரசின் உத்தரவு வேண்டுமென்று சொன்னர்கள். வாங்கி உபயோகிப்பவர்களுக்கு நியாயமான விலையில் கொடுக்கவேண்டும் என்றும் சொன்னர்கள். இப்போது வியாபாரிகளை கொள்முதல் செய்ய விட்டுவிட்டு அவர்களிடம் லெவி வாங்குகிருேம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் விவசாயிகளிடம் நேரடியாக கொள்முதல் செய்தால் விவசாயிகளுக்கும் நியாயமான விலை கிடைக்கும், மக்களுக்கும் நியாயமான விலையில் கிடைக்கும். எனவே, வியாபாரிகளிடமிருந்து லெவி வாங்குவதற்குப் பதிலாக அரசு நேரடியாகவே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: உறுப்பினர் அவர்கள் சொல்வது, மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகும். லெவி வாங்கக் கூடாது என்ருல், மொத்த வியாபாரத்தை அரசு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்கிருர்கள். அதுபற்றி யோசித்து பின்னல்தான் முடிவு செய்யமுடியும்.

உணவுப் பொருள்கள் கடத்தல்.

* 546 **வினு—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதத்தில், தமிழகத்திலிருந்து உணவுப்பொருட்களை கள்ளத்தனமாக கடத்தியவர்கள் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர், மாவட்டவாரியாக?

(இ) அவர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ)

மாவட்டம்	கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை.
தர்மபுரி	73
கோயம்புத்தூர்	1,222
மதுரை	66
திருநெல்வேலி	3
கன்னியாகுமரி	40
	1,404

(இ) 389 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கடத்தப்பட்ட உணவுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. மீதமுள்ளவை புலனாய்வில் உள்ளன.

திரு. கே. என். குமாரசாமி : உணவுப் பொருள்கள் கடத்தலைத் தடுக்க ஆங்காங்கே செக்போஸ்ட் போடுவதன் மூலம் ஏதேதோ தடுத்துவிட முடியும் என்று அரசாங்கம் நினைக்குமானால் அது தவருகத்தான் முடியும். காரணம், தனி வியாபாரிகள் கொள்முதல் செய்து விற்பனை செய்வதை நாம் தடை செய்யாமல் இருப்போமானால் நிச்சயமாக அந்தக் கடத்தல் நடந்து கொண்டு தானிருக்கும். என்ன வழக்கு போட்டாலும் அவர்கள் அதைச் சந்திக்கத் தயாராயிருக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கேட்டிருக்கிற கேள்விக்கும் இதற்கும் என்ன பொருத்தம் என்று தெரியவில்லை. அது பற்றிய கேள்விக்கான பதில் இல்லை

திரு. என். கே. பழனிசாமி : இது வரையில் சர்க்கார் எடுத்த நடவடிக்கைகள் பூராவும் ஸ்மகிள் செய்யக் கூடியவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பதுக்கல்காரர்கள் மீது அதிகப் படியான நடவடிக்கைகள் எடுப்பதில்லை. காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : பதுக்கலுக்குக் காரணமாக உள்ளவர்களைத்தான் பல பேர்களை பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிடித்துப் போட்டிருக்கிறோம்.